## 2. வான் சிறப்பு

**11.** *வானின் றுலகம் வழங்கி வருதலால்*
*தானமிழ்தம் என்றுணரற் பாற்று*

**மழையே உலகை வாழ வைத்து**
**மலர வைக்கும் செழுமையே ! அதனால்**
**மழையே உயிர்களுக்கு அமிழ்தமே !**

**12.** *துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூஉ மழை*

**உணவை உண்பவர்களுக்காக**
**உணவை உண்டாக்குபவனுக்கு**
**உணவுப் பொருளை விளைவிக்க**
**உதவுகின்ற மாமழையே...! நீயே**
**உணவாகவும் மாறிய தியாகத் துளியே...!**

**13.** *விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து*
*உள்நின் றுடற்றும் பசி*

**விண்ணிலிருந்து வீழுகின்ற மழைத்துளி**
**விழாமல் பொய்த்துப் போனால்**
**விரிந்து பரந்து கிடக்கும் கடல் சூழ் உலகமும்**
**விக்கித்து உயிர்கள் பசியால் வாடி வதங்குமே !**

**14.** *ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்*

**உழவிற்கு வேண்டிய மழையின் வருவாய்**
**உள்ளபடி வர வேண்டிய அளவு வரத்துக் குறைந்தால்**
**உழவன் ஏர் பிடித்து உழுது**
**உணவுகளை விளைவிப்பது குன்றி விடுமே !**

**15.** *கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை*

**உயிர்களைப் பெய்யாமல் கெடுப்பதும் – பிறகு**
**உறுதுணையுடன் கெட்டவர்களுக்குப் பெய்தும்**
**என்றும் நலிந்த உயிர்களை உயர்த்துவதும்**
**எல்லாமும் ஆன மழையே !**

16. *விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே*
*பசும்புல் தலைகாண் பரிது*

**விண்ணிலிருந்து மழைத்துளி**
**விழுந்தாலன்றி**
**தாய் மண்ணில் பசும்புல்லின்**
**தளிர் கூடக் காண இயலாதாம் !**

17. *நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி*
*தான்நல்கா தாகி விடின்*

**கடல் நீர் ஆவியாகி மேகமானாலும்**
**கடலில் மீண்டும் மழையாகப் பெய்யாவிடின்**
**கண்டத்தின் நெடுங்கடலும் வற்றி வளம் குன்றுமே !**

18. *சிறப்பொடு பூசனை செல்லாது வானம்*
*வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு*

**வானம் வறண்டு பொய்த்துப் போனால்**
**வானில் வாழும் வானவர்க்கும்**
**வாஞ்சையுடன் பூசனையும் திருவிழாவும் ஏது ?**

19. *தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்*
*வானம் வழங்கா தெனின்*

**தகைசால் வானம் மழைதனை வழங்கா விட்டால்**
**தயங்காமல் பிறர்க்குச் செய்கின்ற தானமும்**
**தனக்காகச் செய்கின்ற தவமும்**
**தங்காதே இவ்வுலகில் !**

20. *நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு*

**உண்மையில் நீரின்றி அமையாது உலகமெனின்**
**உயர் வானிலிருந்து மழை இல்லாமல் போனால்**
**உயிர்களிடத்து ஒழுக்கம் இல்லாமல் போகும் !**